ஜனவரி 26-இல்

மானம் கெடும் தமிழர்க்கு...

(இந்தி எதிர்ப்புக் கவிதைகள்)

::

கோவை கல்லூரி மாணவர்கள்

::

விலை 25 காசுகள்

ஜனவரி 26 - இல்

மானம் கெடும் தமிழர்க்கு...

(இந்தி எதிர்ப்புக் கவிதைகள்)

கோவை கல்லூரி மாணவர்கள்

தொடர்பு கொள்ளும் முகவரி :

ஆ. துரைக்கண்ணு,
உப்பிலிபாளையம்,
கோயமுத்தூர் - 15.

முதற்பதிப்பு : 16—1—1965
இரண்டாம் பதிப்பு : 24—1—1965
மூன்றாம் பதிப்பு : 5—2—1965

படையல்

மொழி காரணமாக ஏற்பட்ட போராட்டத்தில் ஆண்களும் பெண்களுமாக 1200-பேர் சிறை புகுந்த அதிசயத்தை உலக வரலாற்றில் காணமுடியுமா? தமிழகத்தில் கண்டோம். 1938-இல் இந்தி கட்டாயம் ஆக்கப்பட்டபோது சிறை சென்ற முன்னோடிகள் நினைவாக இச்சிறு நூல்.

கவிதையின் கருத்துகளுக்கு எழுதிய கவிஞர்களே பொறுப்பாவர்.

வாழ்த்துகள்

(அண்ணல் இராஜாஜி அவர்களிடமிருந்து)

"ஆசீர்வாதம்.

என் ஆசியில்லாமலேயே நீங்கள் செய்வதைச் சுதந்திரமாகச் செய்யுங்கள் அதுதான் நல்லது."

அன்புடன்,

இராஜகோபாலாச்சாரி.

* * *

(முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களிடமிருந்து)

"ஜனவரி 26–இல் இந்தி ஆட்சி மொழியாதல் பற்றி, கோவை, கல்லூரி மாணவர்கள் இயற்றியுள்ள இந்தி எதிர்ப்புக் கவிதைகள் அனைத்தும் ஒரு சிறு நூலாக வெளிவரும் செய்தி என்னைப் பெரிதும் மகிழ்விக்கிறது.

இக்கவிதை நூல் மாணவர்களின் உள்ளத்தை அப்படியே படம் பிடித்துக் காட்டுவதாக இருப்பதால் இது ஆட்சி செய்பவர் உள்ளத்தையும் திருத்த உதவும் என நம்புகிறேன். பொதுமக்கள் இதனைப் படித்துப்பயன் பெற வேண்டும் எனவும், மாணவர்கள் இதுபோன்ற சிறந்த கவிதைகளை இன்னும் பல்வேறு துறைகளிலும் இயற்றித் தமிழ்ப்பணி புரிய வேண்டுமெனவும் வாழ்த்துகிறேன்"

தங்களன்பிற்குரிய

கி. ஆ. பெ. விசுவநாதம்.

தி. வ. 1995, மார். 26,
திருச்சிராப்பள்ளி-8.

முன்னுரை

26-1-'65....!

'கல் தோன்றி மண் தோன்றாக்காலத்தே முன்தோன்றி மூத்த' பிறப்பறியாத் தமிழுக்குச் சாவுநாளாம்!

இச்சிறு நூல்—கோவை, கல்லூரி மாணவர்களின் கூட்டு முயற்சி. இத்தோழர்கள் இந்தி மொழிக்குப் பகைவர்கள் அல்லர்; இந்தி ஆட்சி மொழியாவதற்கே பகைவர்.

பெரியாரைத் துணைக்கோடல் வள்ளுவம்; எனவே 'அண்ணலை'யும், 'முத்தமிழ்க் காவலரை'யும் துணையாகக் கொண்டோம்.

இக்கவிதைகளின் உருவங்களை நோக்காதீர்கள்; உணர்ச்சிகளை நோக்குங்கள். கவிதைகளின் அமைப்பை நோக்காதீர்கள்; அக எழுச்சியின் ஆழத்தை நோக்குங்கள்.

இம்முயற்சியில் ஆக்கமும், ஊக்கமும் ஈந்து வந்த தோழர்க்கு நன்றி!

அன்புள்ள,

கோவை,
16-1-'65



செயலாளர், அனைத்துக்கல்லூரி மாணவர் மன்றம்,
கோயம்புத்தூர்.

இந்திக்குத் தமிழென்ன தாழ்வு—இதை
எதிர்க்காத தமிழர்க்கு இனியென்ன வாழ்வு?

தமிழர்க்குத் தமிழொன்றே மீதி—அதுவும்
தாழ்வுற்று அழியவோ இதுவென்ன நீதி?

—கி. ஆ. பெ. விசுவநாதம்.

முன்னைத் தமிழ்நிலை காணவே — இந்தி
மூதேவியைக் கழுவில் ஏற்றுக.

புறப்படு உடனே போருக்கு!

வெற்றிக் கொடியினை நாட்டுக — இந்தி
வீணரை நாட்டினில் வாட்டுக!
புற்றின் நாகம் போன்றோரைத் — தமிழ்ப்
புலத்தை நீக்கியே ஓட்டுக!

சங்கினை ஊதியே முழக்குக — சமரில்
சாடியே சழக்கரைக் கலக்குக!
எங்கணும் தமிழ்த்தாய் ஆளுக — இந்தி
என்றிடும் பேயவள் மாளுக!

அன்னையைப் புகழிடம் ஏற்றுக — அவள்
அழகினைக் கவிதையில் போற்றுக!
முன்னைத் தமிழ்நிலை காணவே — இந்தி
மூதேவியைக் கழுவில் ஏற்றுக!

அன்னைத் தமிழ்நமை ஆளுக — இங்கே
ஆண்டிட வரும் இந்தி வீழுக!
சின்ன மதியினில் ஆள்பவர் — சிந்தை
சேர்ந்தே சூழிருள் மாளுக!

வடவர் வருகிறார் தேடியே — நாமும்
வெல்வோம் அவர்தமைச் சாடியே!
வடவர் பரம்பரைப் பேடியர் — கண்ணில்
விழாது மறைவர் ஓடியே!

புறப்படு உடனே போருக்கு — வீணே
பயந்தால் பின்பயன் யாருக்கு?
தருவோம் பாடம் ஊருக்கு — நம்வலி
வழியாய் அமையும் பாருக்கு!

க. வே. முத்துசாமி,
அரசினர் கலைக்கல்லூரி.

தனைக்காக்கத் தன்நாவைக் காத்தல் வேண்டும்;
தமிழ்காக்க நம்உள்ளம் கொதித்தல் வேண்டும்!

செத்தென்ன? இருந்தென்ன?

சொத்தையெனும் இந்திமொழி ஆட்சி யேற்றுச்
சுகவாழ்வு பெற்றிடவே நினைத்தால் இங்கே
எத்துணையோ வளம்பெற்ற தமிழ்தான் ஆட்சி
ஏன்செய்யக் கூடாதாம்? ஏமா றோம்நாம்!
அழிவுதரும் இந்திஅர(சு) என்றே முரசம்
அறையட்டும் முழுச்செவிடும் அதிர்தல் வேண்டும்;
ஒழிந்திடுமாம் இந்தியினால் தமிழர் தாயை
ஒழித்திடுவார் முதுகெலும்பை ஒடித்தல்வேண்டும்;

செத்திடுவாள் நம்அன்னை என்றே சொன்னால்
சிந்திடுவோம் கண்ணீரே; என்செய்வோம்நாம்?
செத்திடுவாள் தமிழன்னை என்றால் இங்கே
செத்திடுவோம் உடன்நாமும்; காக்கும் ஆவல்
செத்ததுநம் இடையேதான் என்னும் போழ்து
செத்தென்ன? இருந்தென்ன? ஒன்று தானே?
இத்தருணம் இளைஞர்காள்! தமிழர் தாயை
இருந்தோம்பிக் காப்பதலால் வேலை ஏது?

மொழிகாத்தார் வழிவகுத்தார் வாழ்க்கைக் கென்றே
மொழிந்திட்டார் மூதறிஞர்; உயர மேலும்
வழிகாட்டி உதவுவது மொழியே அல்லால்
வாழ்க்கையிதில் வேறுளவோ? அறிவாய் நீயே!
தனைக்காக்கத் தன்நாவைக் காத்தல் வேண்டும்
தமிழ்காக்க நம்உள்ளம் கொதித்தல் வேண்டும்
உனைக்காக்க உன்றன்மொழி காத்தல் வேண்டும்
ஓடிவந்தே உனதுயிரைப் பணயம் வைப்பாய்!

வே. இலக்குவன்,
வேளாண் கல்லூரி.

'ஆதிக்கம்' அழிவது வரலாறு—இந்தி
ஆணவம் அழிவதும் வரலாறு.

முந்தைத் தமிழின் நிலை காண...

நல்லறன் கொன்றவர் ஆளவந்தார்—நாடு
நரகம் ஆகிடத் தொல்லைதந்தார்

'பெரும்பான்மை' சொல்வதை ஏற்பதுவாம்—தீய
பீடையாம் இந்தியைக் கற்பதுவாம்

தத்துவத் தென்மொழி அழிவினிலாம்—அந்தத்
தரமிலா இந்தியும் ஆட்சியிலாம்

காந்தியின் வழியினில் வந்தவராம்—அவர்
காட்டிடும் கருணையைப் பார்த்திடுவீர்

ஓயாமல் இந்தியைப் புகுத்திடுவார்—அதை
ஒப்பற்ற கட்டிலில் இருத்திடுவார்

தமிழக எட்டப்பர் குனிந்திருக்க—ஆளும்
தருக்கர் தலையினில் குட்டிடுவார்

இளித்தே எட்டப்பர் குறட்டைவிட—தீய
'இந்தி'யர் தலையில்கல் போட்டிடுவார்

நாடொறும் இத்தீமை வளருதடா—இந்த
நயவஞ்சகம் நாட்டினில் பெருகுதடா!

அறவோர் சொல்வதை ஏற்பதில்லை—அவர்தம்
அன்பு மொழிகளைக் கேட்பதில்லை

தேசியப் போர்வையைப் போர்த்துகிறார்—உயிரில்
தீயினை மூட்டியே வாட்டுகிறார்

ஆதிக்கம் அழிவது வரலாறு—இந்தி
ஆணவம் அழிவதும் வரலாறு

சிந்தனை தந்திடும் தாய்மொழியாம்—உயர்
சிறப்புகள் அளித்திடும் தென்மொழியாம்

முந்தைத் தமிழதன் நிலைகாண—தமிழா!
முன்னேறு இந்தியின் கொலைகாண!

சி. வி. கந்தசாமி
அரசினர் கலைக்கல்லூரி

'முலையறுத்தே எறிந்திடுவேன், என்றாள் அன்னை,
'முதுகுகாட்டி ஓடுவதைப் போரில் கண்டால்!'

சீ, சீ, வெட்கம்!

அக்காலத் தமிழகத்தை இனிதே ஆண்ட
அரசரொடு புலவரினம் ஒருங்குச் சேர்ந்தே
எக்காலும் வாழ்கின்ற தமிழுக் காக
எழிலான இலக்கியமாம் ஆரம் செய்து
சாக்காலம் வந்திடினும் தமிழைக் காத்துச்
சாவாத தமிழுக்காய்ச் செத்தார், சென்றார்
இக்காலத் தமிழகத்தை எண்ணிப் பார்த்தால்
ஏக்கந்தான் பெருகுதடா! வேறென் சொல்வேன்!

இந்தியெனும் மந்திநம(து) இன்பம் போக்க
இவ்வாண்டில் வருகின்ற செய்தி நம்மை
மந்தமுறச் செய்திடுமோ? சொல்வீர்! நல்ல
மறத்தமிழர் மரபோநாம் சீ,சீ, வெட்கம்!
சொந்தமெனத் தமிழ்நாடு வந்த இந்தி
சொகுசாக உயர்ந்திடவோ? எண்ணிப் பாரீர்!
நந்தாயின் புகழ்பேணல் வேண்டும், இன்றே
நாய்இந்தி புறமோடச் செய்தல் வேண்டும்!

'முலையறுத்தே எறிந்திடுவேன்' என்றாள் அன்னை,
'முதுகுகாட்டி ஓடுவதைப் போரில் கண்டால்
கொலைபாவம் பழிக்கெல்லாம் அஞ்சேன்; வாளால்
கொன்றிடுவேன் அத்தகைய கோழை தன்னை!'
நிலையான தமிழ்வீரம் கண்டோம் அங்கே!
நின்றதுவோ தமிழ்ப்பெருமை நிலையாய் இங்கே?
அலைபாயும் உளத்துடனே தமிழர் இன்னும்
அஞ்சுகிறார் பேடியராய், வீரம் எங்கே?

க. ஆ. மு. முகமது அப்துல் காதர்,
வேளாண் கல்லூரி.

"தோற்று ஓடும் கோழை அல்லர்!
தொடங்கு முரசொலி"

வேண்டாம் இந்தி!

நேற்று வந்த நீலி இன்று
ஆட்சி செய்யவா — அட,
நிலத்தி லூறும் பாம்பு போல
எம்மை வாட்டவா?

சேற்று நீரை யொத்த இந்தி
சிரித்து மகிழவா? — இனி
செம்மை யான தமிழர் கூட்டம்
சிறையில் போகவா?

மேற்கு மொழிகள் ஆட்டம் போட்டு
மீசை முறுக்கவா? — அட,
மேரு மலையின் குரங்கு என்றால்
வீட்டில் வைக்கவா?

தோற்று ஓடும் கோழை யல்லர்
தொடங்கு முரசொலி! — இனி
தொந்தி தள்ளி வாந்தி பண்ணும்
இந்தி சாகவே!

வேற்று மொழி இந்தி தன்னை
விரட்டி அடிக்கவே, — அட,
வீறு கொண்டு எழுந்தி ருங்கள்
'வேண்டாம் இந்தியே!'

சுப்பு சண்முகம்.
சாந்தலிங்கர் தமிழ்க் கல்லூரி.

''மாந்தளிரே! மணந்துவரும் தென்றல் காற்றே!
மங்காத புகழ்விளங்கு சங்கே!''

பாரிங்கே "இந்தி" "மந்தி"!

பனையோலைப் பாடையிலே பாம்புத் தாதி
பதனீரில் குளிப்பாட்டி விடப்பால் உண்டு
வனைந்தஎழில் தமிழ்நாட்டுத் தொட்டி லுக்கு
வல்லுரிமை கொண்டாடி வருகின் றளாம்
மனைவிளங்கு தமிழரகம் கும்பி வேக
மதிகெட்டோர் தாலாட்ட வருகின் றளாம்
தினவெடுக்கும் தோளுடைய தமிழா கொஞ்சம்
திசைதிரும்பிப் பாரிங்கே இந்தி மந்தி!

பூந்தமிழே புதியநறும் சுவையே தேனே
புனிற்றிளமை சேர்தமிழே பூவை மானே
''மாந்தளிரே மணந்துவரும் தென்றல் காற்றே
மங்காத புகழ்விளங்கு சங்கே'' என்று
தீந்தமிழில் கொஞ்சுகிறய் ஆனல் இன்று
தேசீய மொழியென்று வருகின் றளாம்
வாந்திமொழி நாகரிகப் பண்பா டற்ற
வல்லரக்கி பாரிங்கே இந்தி மந்தி!

கம்பனது காவியமும் படித்தால் காணும்
கண்ணுறங்கும் மதிமயங்கும் சிலம்பு பாடல்
நம்பன்திரு வாய்மலர்ந்த குறளும் எல்லாம்
நந்தமிழில் நாம்கற்க இருக்க அந்த
கொம்பினிலே சுருக்கிட்டு மாட்டித் தொங்கும்
கொலையாளர் கொண்டுவரும் மொழியாம் இங்கு
வம்பர்களால் அதிகார மமதை ஏந்தி
வருகிறதாம் பாரிங்கே இந்தி மந்தி!

சேதுநாதன்,
அரசினர் கலைக்கல்லூரி.

"......... பிணங்கள் மேலும்
வளரட்டும் மலையைப் போலே!"

ஓடட்டும் குருதி வெள்ளம்!

முறைப்படி வாழ்ந்தா ளில்லை;
முதற்படி கற்று ளில்லை;
அரைப்படி தாண்ட வில்லை,
அதற்குள்ளே 'முழுசா'ய் ஆனாள்;
உருப்படி யாக வாழ
உயிரின்மேல் ஆசை யின்றிச்
செருப்படி வாங்க வந்தாள்
சிறப்பில்லா இந்திப் பெண்ணாள்!

சேயெனச் செழித்து வாழும்
செந்தமிழ் மொழியைக் கண்டு
நாயெனக் குரைத்து வந்தாள்;
நாம்சும்மா விடக் கூடாது!
சீயென உதைத்துத் தள்ளிச்
செம்மையாய் வாங்க வேண்டும்.
தாயெனக் குண்டென் றெண்ணித்
தமிழரே திரண்டு வாரீர்!

விளக்குபோல் ஒளியை வீசி
விளக்கமாய் ஆகும் தாயை
விலக்கவே வந்தாள் வேசி!
விளக்கங்கள் பேசித் தீர்க்கும்
வேலையே நமக்கு வேண்டாம்;
விரட்டியே ஓட்டு தற்கு
விளக்குமாற் றடியே தேவை!
வெள்ளமே! ஓடி வாரீர்!

ஓடட்டும் குருதி வெள்ளம்!
ஒவ்வொரு பிணமாய்ப் பார்த்துப்
பாடட்டும் பரணிப் பாட்டு!
பறந்தங்கே கழுகுக் கூட்டம்
தேடட்டும் நல்ல நெஞ்சை!
தேடியும் கிடைத்தி டாமல்
வாடட்டும்! பிணங்கள் மேலும்
வளரட்டும் மலையைப் போலே!

தென்கச்சி கோ. சுவாமிநாதன்,
வேளாண் கல்லூரி.

"அரசிருந்த தமிழன்னை ஆட்சியிலே
சூழ்ச்சிசெயும் ஆட்கள் யாரும்
எரிசருகு! தமிழரிடை எழுச்சியுறும்
தமிழார்வம் கொழுத்த தீ! தீ!!"

—பாரதிதாசன்.

''தருகின்ற பெரும்பொருளும் பதவி யாவும்
தாய்த்தமிழின் காலடியில் தூசு காணீர்!''

வாளெடுப்பீர்! பகை முடிப்பீர்!

பொதியமெனும் மலைப்பிறந்து பூக்க மழ்ந்து
புலவர்களின் செந்நாவில் நடன மிட்டுப்
பதியான தென்மதுரை தன்னை ஆண்ட
பாண்டியனார் திருமடியில் வளர்ந்த செல்வி
நதியான காவிரியும் பொருநை வைகை
நலம்பாட அரசிருந்த தமிழ மண்ணில்
சதியான இந்திக்கே ஆட்சி என்றால்
சாவாது பிழைத்திருப்பார் தமிழர் தாமோ?

செங்குருதி மணங்கமழுஞ் செருக்க ளத்தில்
செந்தமிழீர்! எலும்பெடுத்த கருவி யாக்கி
வெங்குருதி நரம்பெடுத்து வில்லி ழைத்து
'வீரத்திற் கொருகுலமாந் தமிழ மாந்தர்
தங்குருதி தந்தேனும் தமிழைக் காத்துத்
தாம்மடிவர்' எனும்புகழைத் தரணி பாடப்
பொங்கிவரும் பெரும்பகையாம் இந்திப் பேயைப்
பொடிப்பொடியாய்த் துகளாக்கித் தகர்க்க வாரீர்!

வருகின்ற இந்திக்கு வால்பி டித்து
வண்டமிழர் மறஞ்சாய்தல் ஆமோ? சொல்லீர்!
பொருகின்ற மரபெடுத்த மறவர் நாட்டில்
போக்கற்ற இந்திக்கே ஆக்கம் ஆமோ?
தருகின்ற பெரும்பொருளும் பதவி யாவும்
தாய்த்தமிழின் காலடியில் தூசு காணீர்!
செருவென்ற மறத்தமிழீர்! வாளெ டுப்பீர்!
செந்நீரால் தமிழ்த்தாயைக் குளிக்க வைப்போம்!

ப. தமிழ்மணி,
சாந்தலிங்கர் தமிழ்க் கல்லூரி

''மாருத செந்தமிழே ஆட்சி செய்ய
மங்காத உணர்ச்சியது பொங்கே பொங்கு!''

இந்திக்குப் பாடை கட்டு!

இந்திக்கு அரியணையில் இடமே தந்து
இருக்கின்ற பிறமொழிகள் அழிக்கும் திட்டம்
மந்திகளின் விளையாடல் வெறியர் சூழ்ச்சி
மாண்புறுசெந் தமிழ்நாட்டு மறவர் நெஞ்சில்
செந்தீயைக் கொட்டியதில் நெய்யை வார்த்து
சிரிக்கின்றார்; ஏமாளிக் கூட்ட மாக
செந்தமிழர் ஆகிடவோ? 'சீச்சீ' வெட்கம்!
தெருப்பொறுக்கி இந்திக்குப் பாடை கட்டு!

ஊருக்கும் பேருக்கும் எழுத்தோ உண்டு?
உல்லாசப் பேச்சுக்கு மொழியோ உண்டு?
சோற்றுக்கும் வழியேதும் உண்டோ? இந்தி
சொந்தமெனக் கொண்டாடி வருகின் றாளாம்!
மாருத செந்தமிழே ஆட்சி செய்ய
மங்காத உணர்ச்சியது பொங்கே பொங்கு!
யாருக்கும் வேண்டாங்காண் அரக்கி! இந்தி
எவன்மொழியோ இங்கெதற்கு? பாடை கட்டு!

தமிழுக்கு வேலியிட வேண்டில் அந்தத்
தருக்கர்களின் வெறியாட்டம் தடுத்தல் வேண்டும்!
தமிழுக்கு வாழ்வளிக்க வேண்டில் அந்தச்
சதிகாரர் ஆதிக்கம் வீழ்த்த வேண்டும்!
தமிழுக்கு மகுடம்சூட்ட வேண்டில் அந்தத்
தடியர்களின் ஆட்சிக்கு முடிவு வேண்டும்!
தமிழுக்கு உயிர்ப்பளிக்க வேண்டில் அந்தச்
சண்டாளர் இந்திக்குப் பாடை கட்டு!

ம. இளங்கீரன்,
சாந்தலிங்கர் தமிழ்க் கல்லூரி.

"கழுத்தறுக்க வேண்டுமினி இந்தி தன்னைக்
கழுவேற்ற வேண்டுமடா!......"

இருபத்தாறில்...!

ஊருக்கே உபதேசம் சொல்வார் இங்கே
ஒருமொழியே வேண்டுமெனச் சொல்வார் நம்மை
பேருக்குத் தேசிய ஒருமைப் பாடாம்
பேதைகளே மயங்கிவிட்டீர் மூடர் பேச்சில்
பாருக்கே உபதேசம் செய்து விட்டுப்
பச்சோந்தி யாகிவிட்ட மந்திக் கூட்டம்
யாருக்கும் அஞ்சாமல் திணிக்கின் றூர்கள்
ஏ! தமிழா! சனவரியாம் இருபத் தாறில்!

அலைபோலக் கலையாடும் அரங்கம் மன்றம்
அசைந்தாடும் பூஞ்சோலைப் பந்தர் இல்லம்
சிலைபாடும் செந்தமிழர் குடிலே வீடு
செம்மாந்து வருகின்றூள் இந்தி என்னும்
உலைக்கரியாம் மூதேவி பிணத்துக் கள்ளி
ஓடிவரும் போதிங்கு வழியைக் காட்டி
நிலைகெட்டுத் திரிகின்றூர் மந்திக் கூட்டம்
நினை தமிழா சனவரியாம் இருபத் தாறில்!

மொழிமழலைக் குழந்தையினைக் கருவ றுக்க
மூதேவி இந்தியெனும் மந்தி தன்னை
விழிபிதுங்க முகத்தினிலே அடிக்க வேண்டும்
வேண்டாமே இத்திநமக் கென்று சொல்லி!
'கழுகு' 'நரிக்' கூட்டங்கள் கயமைப் புத்தி
கடைகெட்டுத் திரிகின்ற மூடர் தம்மின்
கழுத்தறுக்க வேண்டுமினி இந்தி தன்னைக்
கழுவேற்ற வேண்டுமடா இருபத் தாறில்..!

சிவ. பொய்யாமொழி,
சாந்தலிங்கர் தமிழ்க் கல்லூரி

'கனியன்ன தமிழுக்குத் தாழ்வு செய்யும்
கடைகெட்ட தமிழர்க்கு வீழ்வு !'

தீ வைத்துக் கொளுத்திடுவீர் !

இந்திக்கு முள்வேலி இடுவீர் !—இன்றேல்
இங்குவர நேர்ந்தாலே கெடுவீர்!
மந்திக்கு விலங்கிட்டு வைப்பீர்!—இன்றேல்
மானத்தை இழந்துமிகத் தவிப்பீர் !

கண்ணிலிரு குண்டூசி குத்தும் — அந்தக்
காட்சிக்கே இதுவொன்று சாட்சி !
மண்ணிலினி வாழ்ந்தென்ன செத்தும்—அந்த
மானத்தைக் காப்பாற்றே ஆட்சி !

ஆடாத கூத்தாடும் ஆட்சி — இனி
அசையாத நிலையானர் காட்சி !
கூடாத இந்தியதைப் புகுத்தி—அவர்கள்
குள்ளநரி ஆனார்கள் இங்கே !

இனியென்ன நமக்கென்றே இருந்தே,—அந்த
இந்திக்கே அடிவருட லாமோ ?
கனியன்ன தமிழுக்குத் தாழ்வு,—செய்யும்
கடைகெட்ட தமிழர்க்கு வீழ்வு !

சொன்னாலும் புரியாத மடையர்—தமிழச்
சோம்பேறிக் கூட்டத்தில் கடையர்
தின்னத்தான் கேட்கின்றார் ! 'தூத்தூ'—அவரைத்
தீவைத்துக் கொளுத்திடுவீர் இன்றே !

திங்களூர் பொன்னையன்,
பூ. சா. கோ. கலைக்கல்லூரி.

"ஆயிரங்கால் பந்தலிலே மணந்த பெண்ணை
அடுத்தவனுக் கொருகணவன் விடுத்த பாங்கில்
போயழகுத் தமிழ்ப்பெண்ணை விட்டுத் தந்த
பெருங்குலமே! தமிழ்க்குலமே!......"

வையப்பா ஒப்பாரி!

வையப்பா ஒப்பாரி! வை,வை! வை,வை!
வடிகண்ணீர்! சளிஒழுக்கு! வை,வை! வை,வை!
தாயிறந்து போனாளாம் வை,வை! வை,வை!
தமிழனை பாடையிலாம்! வை,வை! வை,வை!
ஆயிரங்கால் பந்தலிலே மணந்த பெண்ணை
அடுத்தவனுக் கொருகணவன் விடுத்த பாங்கில்
போயழகுத் தமிழ்ப்பெண்ணை விட்டுத் தந்த
பெருங்குலமே! தமிழ்க்குலமே! வை,வை! வை,வை!

உரைசொல்வார் சவத்திற்கோர் நால்வர் என்றே!
உயர்தமிழா, நீபேறு பெற்றாய்; இங்கே
அரி'பக்த வத்சலனார்' அவையில் உள்ள
அமைச்சரிரு நால்வரடா பாடை தூக்க!
வரிந்துகட்டி விந்தியத்திற் கப்பால் வாழும்
வடவரினம் தப்பட்டை தாரை யெல்லாம்
சரியாக முழக்குகிறார் பிணத்தின் பக்கம்!
செந்தமிழா, ஒப்பாரி வை,வை! வை,வை!

கரிபோலும் 'காமராசர்' தலையாய் நின்றே
கையிரண்டில் சேகண்டி அடித்துச் செல்ல,
கரிபோன்றார் முன்னாலே கடுகாய் நின்றே
கையகலச் 'சாஸ்திரியார்' 'மந்த்ரம்' ஓத,
சரித்திரத்திற் காணாத இனமே! இன்று
சரிகின்ற பேரினமே! வீரத் திற்கே
தரித்திரமாய்ப் போய்விட்ட இனமே! எங்கள்
தமிழினமே ஒப்பாரி வை,வை! வை,வை!

வடக்கிருந்து வருகின்ற 'வாடைப் பெண்ணாள்'
வயதுமிகச் சிறிதேதான்; வாலைக்கன்னி!
'இடக்குசெயுந் தென்றமிழாள்' வயதை யிங்கே
எவரறிவார்? படுகிழவி! பொக்கை வாயாள்!
வடக்கிருந்து வந்தவளை அணைத்தே நல்ல
வாழ்விழந்த கிழவியவள் சவத்தின் மீது
அடதமிழா, கைப்பிடிமண் அள்ளிப் போட்டே
அழுதமிழா! ஒப்பாரி வை,வை! வை,வை!

இறக்கின்ற தமிழ்பேணும் உயிராம் போரில்
அஞ்சாதே புறம்காட்ட! ஏனோ என்றால்
புறமுதுகு காட்டிவிடின் உயிரை வாங்கும்
'புறம்' தந்த தாய்இன்றிங் கில்லை யப்பா!
சிறந்திருந்த ஓரினமே! அடியோ டின்று
சீரழியும் பேரினமே! சாக்க டைநீர்
இரத்தமெனக் கொண்டியங்கும் இனமே! செத்த
இழிகுலமே! ஒப்பாரி வை,வை! வை,வை!

ஆ. துரைக்கண்ணு,
அரசினர் கலைக்கல்லூரி.

"நல்லுயிர், உடம்பு, செந்தமிழ் மூன்றும்
நான் நான் நான்."

— பாரதிதாசன்.

[17-7-1948-இல் சென்னையில் நடைபெற்ற தமிழக இந்தி எதிர்ப்பு மாநாட்டுச் சொற்பொழிவுகளிலிருந்து.]

"………செல்வந்தர்களும் மடாதிபதிகளும் ஆரியதாசர்களாய் ஆகிவிட்டபோதிலும் இந்நாட்டு இளைஞர்கள் தமிழ் அணங்குகள் யாவரும் அறப்போர் துவக்கி இந்தியை ஒழிப்பதில் விரைவில் வெற்றிகாண வேண்டும்……"

—மறைமலையடிகள் (தலைமையுரை)

"தமிழ்மொழி மந்தியையும் மனிதனுக்கும் தன்மை பெற்றது; ஆனால் இந்தியோ மனிதனையும் மந்தியாக்கும் தன்மையுடையது."

—தமிழ்த்தென்றல் திரு. வி. க.

"…ஆனால் அமைச்சர் கூறுகிறார், '…இந்தி ஆட்சி அலுவலுக்காகப் படிக்கப்படட்டும். நாம் அத்துடன் தமிழையும் வளர்ப்போம். தமிழ்க்களஞ்சியம் உண்டாக்குவோம்' என்று. அதாவது களையும் வளரட்டும்; அதோடு பயிரையும் வளர்ப்போம் என்று கூறுகிறார். களை வளர்க்கும் பண்ணையாளனுக்குப் பயிர் வளர்க்கும் பண்பு இருக்கும் என்று நமக்கு நம்பிக்கையில்லை. நம்பிக்கை இருக்கவும் முடியாது. அப்படி நம்பினால் நாம் ஏமாந்தே போவோம்……".

"நான் நன்கு அறிவேன், சட்ட மறுப்பின்றி இந்தி ஒழிய வேறு வழியில்லை என்பதை. ஆகவே சட்டமறுப்பு நடந்து அதன்மூலம் சிறைப்பட்டு ஓர் உடல் எலும்புருவாக நிற்குமானால் முதல் உடல் சிவஞானம் உடலாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்."

—ம. பொ. சிவஞானம்

"தமிழ்காக்கப் போர் முழக்கம் செய்வது தவிர, போர் முரசு கொட்டுவது தவிர, நமக்கு வேறென்ன வேலை?"

—சி. என். அண்ணாத்துரை

"இந்திக்குதான் பொது மொழியாவதற்குரிய தகுதியிருக்கிறது என்று சொல்வது, மற்ற மொழிகளுக்கு இருக்கும் ஆற்றலையும். பெருமையையும் அவமதிப்பதாகும் என்றும், இந்திக்கே தேசிய யோக்கிய்தைகள் இருப்பதாகக்காட்டுவது மற்ற மொழிகளைத் தேசிய யோக்கியதைகளற்ற மொழிகள் என மறைமுகமாகக்கூறிக் கேவலமாகக் கருதச் செய்வதாகும் என்றும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்."

—நாரண-துரைக்கண்ணன் (வரவேற்புரை)